உ


சிவ சிவ

# அன்புநெறி

**மலர்-21 அக்டோபர் 2016 இதழ்-3**

**$2.00**










சித்தியும் சித்தி தரும்தெய்வ மாகித் திகழும்பரா
சத்தியும் சத்தி தழைக்கும் சிவமும் தவம் முயல்வார்
முத்தியும் முத்திக்கு வித்தும் வித்தாகி முளைத்தெழுந்த
புத்தியும் புத்தியின் உள்ளே புரக்கும் புரத்தையன்றே.

–அபிராமிப்பட்டர்



அன்பும் சிவமும் இரண்
டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரும்
அறிகி லார்
அன்பே சிவமாவ தாரும்
அறிந்த பின்
அன்பே சிவமாய் அமர்ந்
திருந் தாரே.

- திருமூலர்



# DR. S. RAVEENDRAN DENTISTRY PROFESSIONAL CORP.

**பல் மருத்துவ நிலையம்**

**பல துறைகளில்**

**இரு இடங்களில்**

**டாக்டர் சபாபதி இரவீந்திரன்**

BDS., MS, F D S R C S. (Eng.)

**MISSISSAUGA OFFICE**

(அதே இடத்தில் Hurontario & Dundas)

3025 Hurontario St., Suite 102

**(905) 270-7844**

**SCARBOROUGH OFFICE**

1139 Morningside Ave., Suite 25

(Morningside & Sheppard)

**(416) 283-9000**


**அன்புநெறி சந்தா விபரம்**

தனிப்பிரதி **$2.00**

வருடச் சந்தா (12 இதழ்கள்) $20.00

**அஞ்சல் பொதிச் செலவுடன் வருடச் சந்தா:-**

| | |
|---|---|
| **கனடா:** | Can. $ 40.00 |
| **அமெரிக்கா:** | Can. $ 45.00 |
| **ஏனைய நாடுகள்:** | Can. $ 60.00 |

**தொடர்புகட்கு: சைவசித்தாந்த மன்றம், கனடா**

Saiva Sidhdhantha Manram, Canada

1008-50 Elm Dr. E. , Mississauga, ON, L5A 3X2 Canada

(Tel.: 905-566-4822)

உ
சிவ சிவ

# அன்புநெறி

| மலர் -21 | துர்முகி வருடம் புரட்டாதி–ஐப்பசி அக்டோபர் 2016<br>திருவள்ளுவர் ஆண்டு - 2047 | இதழ் -3 |
|---|---|---|

**பொருளடக்கம்** **பக்கம்**

1. சிவநெறி . . . . . . . 4
2. குரு பிரதீபா பிரபா விருது பெற்றமை. . 12
3. சரஸ்வதி தேவி . . . . . . 13
4. சைவசித்தாந்தம் வளர்த்த ......... . . . 18
5. நோய் தீர்க்கும் விமலன். .. . . 20
6. சைவத்தை அறியுங்கள் . . . . 24
7. என் நெஞ்சில் இடங்கொண்ட ஒரு பெரியர் . 27
8. மன்றத்தில் நிகழ்ந்தவை. . . 29
9. திருக்குறள் சிந்தனைகள் . . . 30

**ஆசிரியர் :** திருமதி வடிவழகாம்பாள் விசுவலிங்கம்
**நிர்வாக ஆசிரியர்:** திரு. தி. விசுவலிங்கம்
**உதவி ஆசிரியர்:** திருமதி அநிதா திருமுருகா
**வெளியீடு:** சைவசித்தாந்த மன்றம், கனடா

## ஏனாதிநாத நாயனர்
## குருபூசை நாள்: புரட்டாதி உத்தராடம்

பத்தனை ஏனாதி நாதனைப்பார்நீ டெயினை தன்னுள்
அத்தனைத் தன்னோ டமர்மலைந் தான்நெற்றி நீறுகண்டு
கைத்தனி வாள்வீ டொழிந்தவன் கண்டிப்ப நின்றருளும்
நித்தனை யீழக் குலதீப னென்பரிந் நீள்நிலத்தே.

– நம்பியாண்டார்நம்பி



**சைவ சித்தாந்த மன்றம், கனடா**
Saiva Sidhdhantha Manram, Canada 1008-50 Elm Dr. E.
Mississauga, ON L5A 3X2 Canada
Fax/Tel (905) 566-4822 Email:- saivamanram@gmail.com
Web.: www.saivasidhdhanthamanram.com

# திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள்

திருமுருக கிருபானந்தவாரியார் சுவாமிகள் அவர்களின் குருபூசை நாள் ஐப்பசி ஆயிலியம் –அக்டோபர் 24, 2016 ஆகும். அதனை முன்னிட்டு அவர் எழுதிய **சிவநெறி** என்ற கட்டுரை ஆசிரியர் தலைப்பில் வெளிவருகிறது.



## சிவநெறி

இறைவன் என்ற சொல் இறு என்ற பகுதியடியாகப் பிறந்தது. எல்லா உயிர்களிலும் எல்லாப் பொருள்களிலும் இறைவன் நீக்கமற நிறைந்து நிற்கின்றான். இனி எல்லாம் அவனிடத்திலே இருக்க, அவன் அவைகட்கு உறைவிட மாகவும் இருக்கின்றான். இஃது இறைவனுடைய விசுவரூபம்.

எல்லாப் பொருள்களிலும் தங்க வேண்டுதலின், சிறிய–மிகச் சிறிய பொருளாக இருக்கின்றான். மேரு கிரி முதலிய பொருள்கள் யாவும் அவனிடத்திலே தங்கும்படி அப்பெருமான் மிகப் பெரிய பொருளாக விளங்குகின்றான். இதனை உபநிடதம் "அணோரணியாந் மஹதோ மஹீயாநாத்மா" என்று கூறுகின்றது.

அணுவுக்கு அணுவாகவும், மகத்துக்கு, மகத்தாகவும் விளங்குபவன் இறைவன். ஒரு பழங் கதை "பழம் கதை"

திருக்கைலாயமலையில் உமாதேவியாருடன் சிவபெருமான் வீற்றிருக்கின்றார். விநாயகப் பெருமானும் முருகப் பெருமானும் தாய் தந்தையரை வணங்கி வழிபடும் பொருட்டுச் சென்றார்கள்.

தினந்தோறும் பழங்காலத்தில் மைந்தர்கள் தந்தை தாயாரை வழிபடுகின்ற வழக்கம் இருந்தது.

"வைகறை யாமம் துயில் எழுந்து தான் செய்யும்
நல்லறமும் ஒண்பொருளும் சிந்தித்து வாய்வதின்
தந்தையுந் தாயும் தொழுது எழுக என்பதே
முந்தையோர் கண்ட முறை."

என்று ஆசாரக்கோவை கூறுகின்றது.

ஆனை முகனும் ஆறுமுகனும் அம்மையப்பரை வலம் வந்து வணங்கினார்கள். சிவமூர்த்தியின் திருக்கரத்தில் ஒரு தெய்வ மாதுளங்கனி இருந்தது. அதனை இருவரும் கேட்டார்கள்.

அரனார், "அகில உலகங்களையும் ஒரு நொடிப் பொழுதுக் குள் வலம் வருபவருக்கு இக்கனி தரப்படும்" என்று அருளிச் செய்தார்.

முருகப் பெருமான் மயிலின்மீது ஏறி அகில உலகங்களையும் ஒரு நொடிப்பொழுதுக்குள் வலம் வந்தார்.

"ஆகமம் விளைத்தகில லோகமும் நொடிப்பொழுதில்
ஆசையொடு சுற்றும் அதிவேகக்காரனும்"

"இலகுகனி கடலைபயறொடியல் பொரி அமுதுசெயும்
இலகுவெகு கடலிகட தடபார மேருவுடன்
இகலிமுது திகிரிகிரி நெரியவளை கடல்கதற
எழுபுவியை ஒருநொடியில் வலமாக ஓடுவதும்."

– திருவகுப்பு

"எல்லாம் சிவத்துக்குள் ஒடுக்கம்" என்று சிந்தித்து, ஆனைமுக அண்ணல் அம்மையப்பரை வலமாக வந்து கனி பெற்றார். இந்தப் பழங்கதை ஒரு பெரிய தத்துவத்தை உணர்த்து கின்றது.

1. தந்தைக்கு உபதேசித்த தயாபரனுக்குச் சிவத்துக்குள் எல்லாம் ஒடுக்கம் என்பது தெரியாதா? தெரியும்.
2. எல்லா உலகங்களையும் சருவ வல்லமை உடைய விநாயகரால் வலம் வர இயலாதா? இயலும்.
3. சிவபெருமான் இரு மைந்தர்களும் கனி கேட்டபோது உள்ள கனியை உடைத்துப் பகிர்ந்து தரக் கூடாதா?
4. அல்லது ஒரு புதிய கனியை உண்டாக்கித் தரக்கூடாதா? வீதியில் விளையாடுகின்றவன் கூட ஏதேதோ பொருள்களைத் தரு விக்கின்றானே?
5. தம்பிக்கே தந்து விடுங்கள், எனக்கு வேண்டாம் என்று விட்டுக் கொடுக்கின்ற குணம் விநாயகரிடம் இல்லையா?
6. அப்பா அண்ணாவுக்கே கொடுங்கள் நான் பிறகு வாங்கிக் கொள்ளுவேன் என்று ஒதுங்கிப் போகின்ற தியாக புத்தி வேலவன்பால் இல்லையா?

7. ஒரு சிறிய கனி காரணமாக உலகத்தை வலம் வந்தால் கூலி கட்டுமா?

8. பழம் காரணமாகத் திருக்கைலாய மலையில் முருகனும் விநாயகரும் போட்டியிடலாமா?

9. பழத்தின்மீது ஞானமே வடிவாய விநாயகருக்கும் ஞானபண்டித னுக்கும் அத்தனை ஆசையா?

இந்த வினாக்கள் அடுக்கடுக்காக எழுகின்றன. இத்தனை வினாக்களுக்கும் தக்க விடை பகர்கின்றேன்:–

இறைவனைப்பற்றி நாம் முன் என்ன சிந்தித்தோம்? "எல்லா இடங்களிலும் எல்லாப் பொருள்களிலும் அவன் தங்கி இருக்கின்றான்." அவனிடம் எல்லாம் தங்கியிருக்கின்றன என்று இரு விதமாக நினைத்தோம் அல்லவா?

சிவத்துக்குளளே எல்லாவற்றையும் பார்த்தார் கணபதி.

எல்லாவற்றுக்குள்ளும் சிவத்தைப் பார்த்தார் முருகர்.

இந்த அரிய பெரிய உண்மையை உணர்த்துகின்றது அப்பழங்கதை.

இதனைத் தாயுமானவர் கூறுகின்றார்.

"அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய்
ஆனந்தபூர்த்தியாகி
அருளொடு நிறைந்ததெது? தன்னருள் வெளிக்குளே
அகிலாண்ட கோடி எல்லாம்
தங்கும்படிக்கிச்சை வைத்துயிர்க் குயிராய்த்
தழைத்ததெது!"

இனி, "இறைவன் எங்கும் நீக்கமற நிறைந்திருக்கின்றானே! உலக மாயை அவனைப் பாற்றாதோ" என்ற வினா எழும்.

உப்பு விளைகின்ற இடம் கடல். உவர் நீரில் பிறந்து, உவர் நீரைப் பருகி, உவர் நீரில் வாழ்கின்ற மீனுக்கு உவர் ஏறுவதில்லை. மீன் உண்போர் கடல் மீனுக்கும் உப்பிட்டுத்தான் சமைத்து உண்பார்கள். அதுபோல் இறைவன் யாண்டும் உறைந்திடினும் உலக மாயை அவனைப் பற்றாதென உணர்க.

எங்கும் நிறைந்த பொருள் இறைவன் என்றால், ஏன் அது நம் கண்ணுக்குத் தெரியவில்லை என்பாரும் உளர். விறகிலே

நெருப்பு இருக்கின்றது. பாலில் நெய் இருக்கின்றது. ஆனால் அவை கண்ணுக்குத் தெரிகின்றனவா,? இல்லை. விறகிலே தீயும், பாலில் நெய்யும் கண்ணுக்குத் தெரியாமையால், இல்லையென்றால் நமக்கு அறிவு இல்லை என்று உலகம் சிரிக்காதா?

விறகைக் கடைந்தால் தீ வெளிப்படும். பாலைக் கடைந்தால் நெய் வெளிப்படும். அது போல, தியானம் புரிந்தால் இறைவன் வெளிப்பட்டுக் காட்சி தருவான். சாதனைகள் செய்தால் தேவரும் மூவரும் காணமாட்டாத சிவம் தானே வந்து வெளிப்பட்டுத் தோன்றும்.

"விட்டேன் உலகம் விரும்பேன். இருவினை வீணருடன்
கிட்டேன் அவருரை கேட்டுமிரேன் மெய் கெடாதநிலை
தொட்டேன் சுகதுக்கம் அற்றுவிட்டேன் தொல்லை நான்மறைக்கும்.
எட்டேன் எனும்பரம் என்னிடத் தேவந்துஇங் கெய்தியதே."

என்கின்றார் பட்டினத்தடிகளார்.

கற்றவர் விழுங்குங் கற்பகக் கனியும், மற்றவர் அறியா மாணிக்கமலையும் ஆகிய இறைவன் சொரூப நிலையில் 'சிவம்' என்றும், உலகை நோக்கிய தடத்த நிலையில் 'பதி' யென்றும் பேர் பெறுகின்றான்.

இறைவனைப் பற்றியும், உயிர்களின் தன்மைகளைப் பற்றியும் உயிரின் இயற்கைக் குற்றமாகிய ஆணவத்தைப் பற்றியும், சைவசித்தாந்த நூல்கள் தெளிவாகக் கூறுகின்றன. ஏனைய நூல்களில் ஆணவத்தின் பேர்தானும் கூறுமாறில்லை.

## அத்வைதம்

அத்வைதம் என்ற சொல்லுக்குப் பலர் பலவாறு பொருள் கண்டார்கள். திருவருள் துணை செய்யாமையால் மற்ற மதாசிரியர்கள் மாறுபட்ட கருத்துக்களைக் கூறிக் குழப்பஞ் செய்தார்கள்.

"ஏகம் ஏவாத்விதீயம்" என்பது வேத வாக்கு. இதன் பொருள் "ஒன்றேதான் பொருள். இரண்டாவதில்லை" என்பது இதை வைத்துக் கொண்டு சங்கரர் முதலியோர், பிரம்மத்தையன்றி வேறு பொருள் இல்லையென்று முடிவு கட்டிவிட்டார்கள்.

பிரம்மத்தைத் தவிர வேறு பொருளே இல்லையானால், இதனை யார் யாருக்குக் கூறுவது? இந்த வார்த்தையினால், சொல்பவன் ஒருவன், கேட்பவன் ஒருவன் இருக்க வேண்டுமன்றோ?

பிரம்மமே மயங்குகின்றதா? பிரம்மத்தைதவிர வேறு பொருள் இருந்தால்தானே இந்த வசனம் உண்டாகும்.

பிரம்மத்தைத் தவிர தலைமைப் பொருள் வேறு இல்லையென்பதே இந்த வேத வசனத்தின் உட்பொருள்.

ந–த்வைதம் என்ற சொற்கள் சேர்ந்து அத்வைதம் ஆயின. ந என்ற சொல்லுக்கு "சப்த கல்பத்ருமம்" என்ற நூல் ஆறு பொருள்கள் கூறியுள்ளது. அவற்றுள் மூன்று அன்மை, இன்மை, மறுதலை என்பனவாம். இன்மை என்ற பொருளில், அப்பிரகாசம் எனக் கொண்டு, ஒன்றேதான் என்றார் சங்கரர். மறுதலைப் பொருளில் அநீதி, அதர்மம் எனக் கொண்டு, இரு பொருள்கள் என்றார் மத்வர். மெய்கண்டார் அப்பிராமணன், பிராம்மண தருமம் கெட்டன் என்று அண்மைப் பொருளில் கூறியருளினார். பொன்னும் மணியும் போல் உலகமும் இறைவனும் ஒன்றே என அபேதவாதங் கூறியருளினார் சங்கரர். இதில் ஆபரணத்திற்கு வருங் குறைபாடுகள் யாவும் பொன்னுக் கும் வரும். ஆதலால் இது பொருந்தாது என உணர்க.

இறைவனும் உலகமும் ஒளியும், இருளும் போல் வேறு வேறே என்றனர் மத்வர். இது பேதவாதம். இருளும் ஒளியும் பகைப் பொருள். ஆதலால் உலகமும் இறைவனும் தொடர்பில்லாமல் போவதால் இது பொருந்தாமை அறிக.

பஞ்சராத்திரிகள், சொல்லும் பொருளும் போல் பேதாபேதம் என்பர். சொல்லும் பொருளும் வேறே ஆதலால், இவர் கூற்றும் பொருந்துமாறில்லை.

சிவாத்துவித சைவர்களும் மரமும், கிளையும் போல என பேதாபேதமே கூறுவர். அபேதவாதம், பேதவாதம், பேதாபேதவாதம் என்ற மூன்றுமே பொருந்தா என்றால், உலகத்துக்கும் இறைவனுக்கும் உள்ள தொடர்புதான் எவ்வகைப்பட்டது.?

மேலே கூறிய மூன்றனுள் ஒன்றையே கூறாது, மூன்று தன்மைகளும் தன்னுள் காணப்படும் அத்வைத தொடர்பே உலகிற்கும், இறைவனுக்கும் உள்ள தொடர்பு என்கிறார் மெய்கண்டசிவம்.

எண்ணுப் பெயர்முன் நகரம் அண்மைப் பொருளிலேயே வரும்.

ந ஏகம், அநேகம் என்பதுபோல் நத்வைதம், அத்வைதம் என வந்தது.

அத்வைதம் என்பது இரண்டல்லாமை, பிரிவின்மை என உணர்க. பிரிவின்மை என்றதனால் பொருள் இரண்டுதான். இரண்டாயினும் வேறு வேறாய் நில்லாது ஒன்றியே நிற்கும் என்பது கருத்து.

இறைவன் உலகத்தோடு கலப்பினால் ஒன்றாகியும், பொருள் தன்மையானால் வேறாகியும், உலகத்துக்கு உதவும் பொருட்டு உடனாகியும் நிற்கின்றான்.

இறைவன், உலகு உயிர்களோடு, உடலும் உயிரும் போல் ஒன்றாகியும், கண்ணொளியும் கதிரொளியும் போல் வேறாகியும், கண்ணொளியும் உயிரறிவும் போல் உடனாகியும் நின்று அருள் புரிவன்.

இந்த நுணுக்கமான கருத்துக்களை மெய்கண்டார் சுருங்கிய சொற்களால், ‘‘அவையே தானேயாய்’’ என்று கூறி உணர்த்துகின்றார்.

அவையேயாய் – உயிரும் உடலும்போல் ஒன்றாகியும், தானேயாய் – பொருள் தன்மையால் கண்ணொளியும் கதிரொளியும் போல் வேறாகியும், அவையே தானேயாய் – கண்ணொளியும் ஆன்ம அறிவும் போல் உடனாகியும், நின்று இறைவன் அருள் புரிகின்றான்.

‘‘ஈறாய்முதல் ஒன்றாயிரு பெண்ஆண் குணம் மூன்றாய்
மாறாமறை நான்காம்வரு பூதம்அவை ஐந்தாய்
ஆறார்சுவை ஏழோசையொடு எட்டுத்திசை தானாய்
வேறாய்உடன் ஆனான்இடம் வீழிம் மிழலையே.’’

என்று திருஞானசம்பந்தர் இதனை விளக்கியுள்ளார்.

இறைவனுடைய பெருங் கருணையை நினைந்து நினைந்து நாம் உருகி வழிபாடு செய்தல் வேண்டும். இல்லையேல் நன்றி மறந்த பாவத்துக்கு ஆளாவோம்.

இறைவனுடைய திரு ஐந்தெழுத்தை இடையறாது ஓதினால் பிறவிப் பெருங்கடலை எளிதில் கடந்து விடலாம்.

சித்தத்தில் தித்திக்கும் மந்திரம் பஞ்சாக்கரம். சித்திக்கும் முத்திக்கும் அதுவே காரணம்.

"ஒன்று கண்டீர் உலகுக்கு ஒரு தெய்வம்
ஒன்று கண்டீர் உலகுக்கு உயிராவது
நன்று கண்டீர் நமச்சிவாயப்பழம்
தின்று கண்டேற்கிது தித்தித்த வாறே." – திருமந்திரம்

சிவபஞ்சாட்சரத்தை அன்புடன் ஓதும் உத்தமர்க்குத் தரித்திரம் உண்டாகாது. இம்மை, மறுமை, வீடு என்ற மும்மை நலங்களும் உண்டாகும்.

"விச்வேச்வராய நரகார்ணவ தாரணாய
கர்ணாம்ருதாய சசிசேகர தாரணாய
கர்ப்பூர காந்தி தவளாய ஜடாதராய
தாரித்ர்ய துக்க தஹனாய நமச்சிவாய."

"நரகமாகிய கடலைத் தாண்டச் செய்கின்றவன் சிவன். தரித்திரமாகிய துக்கத்தைக் தகனஞ் செய்கின்றவன்" என்று வசிட்ட முனிவர் சிவபெருமானைத் துதி செய்கின்றார்.

"ஆயிரம் எழுத்தல்ல, நூறு எழுத்தல்ல, பத்து எழுத்தல்ல, ஐந்து எழுத்துத்தானே. இதனைக் கூட உச்சரிக்கக் கூடாதா?" என்கின்றார் இராமலிங்க அடிகளார்.

"ஆயிரமன் றேநூறு மன்றே ஈரைந்தன்றே
ஆயிரம்பேர் எந்தைஎழுத் தைந்தேகாண் – நீயிரவும்
எல்லும் நினைத்தியென ஏத்துகினும் ஏத்தாய் வீண்
செல்லுமன் என்செய்கேன் செப்பு."

ஆறு நாளில் கண்ணப்பர் முத்தி பெற்றார் என்று அறிகின்றோம். அதிதீவிரமாக இறைவனிடத்தில் அன்பு செலுத்தினால், கண்ணப்பர் பெற்ற பேற்றை நாமும் பெறலாம்.

திருச்சிராப்பள்ளிக்கு அருகில் ஆனை பூசித்த தலம் திருவானைக்காவும், எறும்பு பூசித்த தலம் திருஎறும்பூரும் காட்சி தருகின்றன. பெரிய பிராணி யானை, சிறிய பிராணி எறும்பு, எறும்பு முதல் யானை ஈறாக என்பார்கள். யானையும் இறைனை வழிபட்டது. எறும்பும் இறைவனை வழிபட்டது. மனிதராகப் பிறந்த நாம் இறைவனை வழிபட வேண்டாமா?

இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ? ஆதலால் ஒவ்வொருவரும் சிவபூசை செய்தல் வேண்டும். திருமுறைகளை ஓதுதல் வேண்டும். திருவெண்ணீறணிந்து கண்டிகை புனைந்து

ஆலய வழிபாடு செய்தல் வேண்டும். இறைவனிடத்தில் இடையறாத அன்பு செய்ய வேண்டும். மால் என்றால் அன்பு. மால் ஆனார்க்கு அவன் எளியவன். அன்பு செய்வார் நெஞ்சில் நீங்காது நிற்பன்.

"அன்று மாலானார்க்கு அரிதாகி நீயுலகில்
இன்று மாலானார்க்கு எளிதன்றோ – கொன்றைசேர்
பொன்னார் சடா மகுடப் புண்ணியா பொற்சபையின்
மன்னா சிதம்பரதே வா."

"தானவரும் மாலும் சதுர்முகனும் மற்றுமுள்ள
வானவருந் தேடி மயங்கவே – ஞானமுடன்
நேயம் பெறுமடியார் நெங்சினுள்ளே நிற்பதென்ன
மாயம் சிதம்பர தேவா."

என்கின்றார் குருநமச்சிவாயர்.

இதுகாறும் கூறியவற்றால், இறைவன் எங்கும் உளன் என்பதும், முருகனும் கணபதியும் சிவனது அத்வைத நிலையைக் காட்டினார்கள் என்பதும், இறைவன் உலகமெங்கும் உறையினும் கடல் மீன் போல் உலக மாயை ஒட்டாதவன் என்பதும், தியானத்தால் அவனைக் காணலாம் என்பதும், அத்வைதம் என்ற சொல்லின் உண்மைப் பொருள் இறைவன் ஒன்றாய் வேறாய், உடனாய் நின்று தண்ணருள் புரிவதே என்பதும், அப்பரமனை வழிபட்டு ஒவ்வொருவரும் உய்தல் வேண்டும் என்பதும் விளங்கும். இவை சிவ நெறியிற் காணும் உண்மைகள்.

## திருமகள் வழிபாடு

கொழுதியிசை யளிமுரலுந் தாமரைமென்
பொகுட்டிலுறை கொள்கைபோல
மழையுறழுந் திருமேனி மணிவண்ணன்
இதயமலர் வைகுமானே
முழுதுலகும் இனிதீன்ற வருட்கொம்பே
கரகமலமுகிழ்த் தெந்நாளுங்
கழிபெருங்கா தலிற்றொழுவோர் வினைதீர
வருகொழிக்குங் கமலக்கண்ணாய்.

– குமரகுருபரர்

# **குரு பிரதீபா பிரபா** விருது பெற்ற நல்லாசிரியை செல்வி சாவித்திரி வைத்தீசுவரக்குருக்கள்



உலக ஆசிரியர் தினத்தை முன்னிட்டு இலங்கை கல்வி அமைச்சு நடத்திய **குரு பிரதீபா பிரபா** விருது வழங்கும் நிகழ்வு 05–10–2016 புதன்கிழமை அன்று கொழும்பு தாமரைத் தடாக மண்டபத்தில் நடைபெற்ற போது, மேன்மை தங்கிய இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா அவர்களிடமிருந்து, கந்தரோடை, சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரியின் ஆரம்ப பாடசாலையின் உப–அதிபராக விளங்கும் நல்லாசிரியை செல்வி சாவித்திரி வைத்தீசுவரக் குருக்கள் அவர்கள் **குரு பிரதீபா பிரபா** விருது பெற்று கௌரவிக்கப் பெற்றார். அவரை கனடா சைவ சித்தாந்த மன்றத்தினரும், சைவசமயகுரவர் பாடசாலையினரும் ஈழத்துச் சிதம்பரம் அருள்மிகு சிவகாமி உடனுறை நடராசப்பெருமான் திருவருளை வேண்டி வணங்கி செல்வி சாவித்திரி வைத்தீசுவரக் குருக்கள் அவர்களை உளமாரப் பாராட்டி வாழ்த்துகிறோம்.

செல்வி சாவித்திரி வைத்தீசுவரக்குருக்கள் அவர்கள், கனடா சைவசித்தாந்த மன்றத்தின் காப்பாளர்களில் ஒருவராகவும் அன்புநெறி சிறப்பாசிரியர்களில் ஒருவராக விளங்கியவரும் அரும்பெரும் சைவத் தமிழ்ப்பணிகள் ஆற்றியவருமான அமரர் தத்துவக்காலாநிதி சிவத்தமிழ் வித்தகர் பண்டிதமணி சிவத்திரு க. வைத்தீசுவரக்குருக்கள் அவர்களின் மகள் ஆவர்.

ஆசிரியர் தி. வி.

ஆதித்தன் அம்புலி அங்கி குபேரன், அமரர்தம்கோன்
போதிற் பிரமன் புராரி முராரி பொதியமுனி
காதிப் பொருபடைக் கந்தன் கணபதி காமன் முதல்
சாதித்த புண்ணியர் எண்ணிலர் போற்றுவர் தையலையே.
– அபிராமிப்பட்டர்

# சரஸ்வதி தேவி

செல்வி சிவயோகமதி கந்தவனம், வெலிங்ரன், நியுசிலாந்து,

"சத்தியாய், விந்துசத்தியாய், மனோன் மணிதா னாகி
ஒத்துறும் மகேசை ஆகி உமை, திரு, **வாணி** ஆகி
வைத்துறும் சிவாதிக்கு இங்ஙன் வரும் சத்தி ஒருத்தி ஆகும்
எத்திறம் நின்றான் ஈசன் அத்திறம் அவளும் நிற்பள்"
– அருணந்தி சிவாச்சாரியார்

சிவசக்தியான பராசக்தியின் ஒன்பான் வடிவங்களில் சரஸ்வதியும் (வாணி) ஒருத்தியாவள் என்பதை அருணந்தி சிவாச்சாரியாரது இப்பாடல் அறியத் தருகிறது. சரஸ்வதி தேவியே பராசக்தியின் ஞான ரூபம். வேதகாலத்துத் தெய்வங்களுள் சரஸ்வதியும் ஒருவள் ஆவாள். கலையின் முப்பெருந் தேவிகள் எனச் சரஸ்வதி, இடா, பாரதி ஆகிய மூவரையும் போற்றி வணங்கி வந்தார்கள். யாகங்கள் செய்யும்போதும் சரஸ்வதி ஒருமுக்கிய தேவதையாகப் போற்றப்பட்டு வந்துள்ளாள். பழம் பெரும் வேதமான இருக் வேதத்தில் நதி தேவதையாகப் போற்றப்பட்டவள். தேவியருள் மகிமை பொருந்தியவள் என்றும் குறிப்பிடுகின்றது. இந்தியாவில் உள்ள சரஸ்வதி நதி, நதிகளுள் உயர்வானது என்றும் நதி தேவதை என்றும் கொண்டாடப் பெற்று வருகிறது. புராண காலத்திலும் சரஸ்வதி வழிபாடு இருந்தமைக்குச் சந்தியா வந்தனம் செய்யும்போது காலையில் காயத்திரி தேவியையும் மதியத்தில் சாவித்திரி தேவியையும் மாலையில் சரஸ்வதி தேவியையும் வணங்கித் துதிக்கப்பட்டமை தக்க சான்றாகும். இங்கு சாவித்திரி தேவி, காயத்திரி தேவி என்று சுட்டப்படும் பெயர்களும் சரஸ்வதியினதேயாம்.

இந்தியா, இலங்கை மட்டுமன்றி திபெத்து, இந்தோனேசியா, யப்பான், சைனா போன்ற கிழக்கிந்திய நாடுகளிலும் சரஸ்வதி வழிபாடு தொன்று தொட்டு நடந்து வந்தது என்பதற்கு அந்தந்த நாடுகளில் இன்றும் அழியாது இருக்கும் கோயில்கள், சிலைகள், சிற்பங்கள் சான்று பகர்கின்றன.

பராசக்தி தனது சிவாம்சத்தில் இருந்து பிரமா, விட்டுணு, ருத்திரன் ஆகிய மூவரையும் படைத்து அவர்களுக்குரிய சக்திகளாக சரஸ்வதி, இலட்சுமி, ருத்திராணி ஆகிய மூவரையும் படைத்தாள் என்பது வரலாறு. மேலும் சரஸ்வதி கண்ணன் வாயிலிருந்தும்

உதயமானவள் என்றும் துர்க்கையை வழிபடுவோர் இலட்சுமியையும் சரஸ்வதியையும் துர்க்கையின் மகளாகக் கருதி வழிபடுவதாகவும் வரலாறுகள் உண்டு.

கல்வி, அறிவு, யுக்தி ஆகியவற்றை அருளும் அன்னை சரஸ்வதி பல காரணப் பெயர்களால் அழைக்கப் பெறுகிறாள். மனஸிலிருந்து உதித்த காரணத்தால் மானஸ கன்னியை, ஓதுபவனைக் காப்பவள் என்பதால் காயத்திரி, ஞானத்தை அருளுவதால் ஞானமூர்த்தி, வாக்கு அருளுவதால் வாக்காள், வரங்களை அளிப்பவள் என்பதால் வரதாயினி, நாவில் வீற்றிருந்து சொற்றிறம் தருதலால் நாமகள், கலைகள் அறுபத்து நான்கினுக்கும் அதி தெய்வம் ஆகையால் கலைமகள் கலைவாணி, வாணி, கமலத்தில் வீற்று இருப்பதாற் கமலாசினி, வெண்டாமரையாள், சகல கலைகளிலும் வல்லமை உடையவள் ஆகையால் சகல கலாவல்லி, வித்தைகளைத் தருவதால் வித்தியாயினி, நூல்களுக்கு உரியவள் என்பதால் பனுவலாட்டி, புத்தகத்தைக் கரத்தில் உடையவள் ஆகையால் புத்தகதாரிணி, வீணையை வைத்திருப்பதால் வீணாபாணி, சரத் (குளிர்காலம்) காலத்தில் வணங்கப் பெறுவதால் சாரதா, பிரமாவின் பத்தினி ஆனமையால் மலரவன் தேவி. இவ்வாறு அவளது பெருமை அருளாற்றல்களை நாமங்களாக்கிப் போற்றித் துதிக்கப்படுகிறாள். சமணர்கள் நாமகள், வாக் தேவி என்றும், புத்தர்கள் மஞ்சு (மேகம்) ஸ்ரீ என்றும், தாய்லாந்தினர் சரஸ்வதி என்றும், சீனர் ‘Biancaitian’ என்றும், யப்பானியர் ‘Bnzaiten’ என்றும் பர்மியர். ‘Thurathadi’ என்றும் வணங்குகிறார்கள்.

குமரகுருபரர் “வெள்ளைக் கலை உடுத்து வெள்ளைப் பணி பூண்டு, வெள்ளைக் கமலத்தில் வீற்றீருப்பாள்” என்று அவள் தூய தோற்றத்தை நம் கண் முன் நிறுத்துகிறார். சரஸ்வதி வெள்ளை ஆடை உடுத்தி வெள்ளை ஆபரணம் அணிந்து வெள்ளைக் கமலத்தில் வீற்றிருந்து இவள் தோற்றம் அளிப்பது அகப்புறத் தூய்மையையும், பளிங்கு போன்ற தூய உருவம் சத்துவ குணத்தையும் சுட்டுகின்றன. அவளுக்கு வாகனமாக அமைந்திருப்பதும் வெள்ளை அன்னப் பட்சியேயாம். ஆனால் ஆதி காலத்தில் சிங்கமே வாகனமாக இருந்ததாகக் கூறப்படுகிறது. வடநாட்டுச் சிற்பங்கள் சிலவற்றில் சிங்கமும் ஆடும் வாகனமாக இருப்பதைக் காணமுடியும். தென்னாட்டைப் பொறுத்த வரையில் சரஸ்வதி தேவியின் வாகனம் மயிலே ஆகும். தேவியின் பிரத்தியேக சின்னங்கள் அட்ச(உருத்திராக்கம்)மாலை, சுவடி, வீணை, வெண் முத்து மாலை,

வெள்ளை ஆடை, வெள்ளை அன்னம் (வாகனம்), வெண்டாமரைப் பூ, (ஆசனம்) அருகணைய மயில் என்பனவாம்.

முகம் பிரம வித்தை என்றும் நான்கு கரங்கள் வேதங்கள் என்றும் கண்கள் எண், எழுத்து என்றும் தனங்கள் இசை, இலக்கியம் என்றும் பாதங்கள் இதிகாச புராணங்கள் என்றும் வீணை ஓங்காரம் என்றும் தத்துவ நூல்கள் கூறுகின்றன. மேலும், சரஸ்வதி முத்தமிழுக்கு உரிய தெய்வமாக இடது கரத்தில் ஏந்திய சுவடி இயலையும் வீணை இசையையும் மயில் நடனம் –நாடகத்தையும் குறிப்பனவாகவும் வலக் கரத்தில் ஏந்தி இருக்கும் அட்ச மாலை மோட்சத்தையும் தூயவெள்ளை ஆடை மனம், மொழி, மெய் ஆகிய மூன்றும் தூய்மையாக இருக்க வேண்டும் என்பதைக் குறிப்பதாகவும் வெள்ளை அன்னம் நீரினை விட்டுப் பாலை மட்டும் உருஞ்சி எடுத்துக் குடிப்பதுபோல் நாமும் பலவற்றைப் படித்தாலும் தேவை அற்றவையை விடுத்து நல்லவற்றைக் கைக்கொள்ள வேண்டும் என்பதைக் குறிப்பதாகவும் பொருள் கொள்ளப்படுகிறது. அறுபத்து நான்கு கலைகளுக்கும் அதிபதியான சரஸ்வதிக்குக் குருநாதர் ஹயக்கிரீவர் என வரலாறு கூறும். அக்குருநாதர் வேறு யாருமல்லர்; திருமாலேயாம். இக்குரு சிஷ்ய முறை கலைகள் ஒரு குரு மூலந்தான் கற்க முடியும் எனக் குருவின் முக்கியத்துவத்தைச் சுட்டி நிற்கின்றது.

சரஸ்வதிக்குத் தனிக் கோயில் இல்லை எனும் கருத்து ஒன்று உண்டு. பிரமா சிவனுடைய சோதி வடிவின் முடியைக் கண்டதாகத் தாளம் பூச் சாட்சியுடன் பொய் கூறியமையாற் சிவனுடைய சாபத்துக்கு உள்ளாகிக் கோயில் இல்லாமற் போனதாகவும், அவரது பத்தினி ஆனமையாற் சரஸ்வதிக்கும் தனிக் கோயில் இல்லை என்பதும் வரலாற்றுக் கதை. ஆயினும் இருவரும் தனிக் கோயில்களில் எழுந்தருளி அருள் பாலிக்கிறார்கள். பிரமாவுக்குக் கொங்கு நாட்டில் திருக்கண்டியூர் எனும் உத்தமர் கோயில், வடநாட்டில் கொடுமுடிக் கோயில், கைதராபாத்தில் ஜலம்பூர்க் கோட்டையில் நவபிரமாக்கள் எனப் பாலபிரமா, குமாரபிரமா, அர்க்கபிரமா, வீரபிரமா, விஷ்வபிரமா, தாரகபிரமா, கருடபிரமா, சொர்க்கபிரமா, பத்மபிரமா என்னும் சந்நிதிகள் உண்டு. சரஸ்வதி தேவிக்கும் கர்நாடக மாநிலத்தில் சிருங்கேரியில் சாரதாம்பா கோயிலும், ஆந்திரப் பிரதேசத்தில் கோதாவரிக் கரையில் பாசார் என்னும் இடத்தில் ஞானசரஸ்வதி சந்நிதியும், தமிழ் நாட்டில் கூத்தனூரில் ஒரு சரஸ்வதி கோயிலும் உண்டு. கர்நாடக மாநிலத்தில் பேலூரில் உள்ள சென்ன கேசவர் கோயிலில் சரஸ்வதி நடனத்

திருக்கோலத்திலும், வேதாரணியத்தில் உள்ள திருக்கோயிலில் வீணை இன்றித் தவத் திருக்கோலத்திலுங் காட்சி தருகிறாள்.

இந்தியா இலங்கைத் தீவு மட்டுமன்றி கிழக்கிந்திய நாடுகளிலும் வாணி வழிபாடு தொன்று தொட்டு நடைபெற்று வருவதை அவ்வவ் நாடுகளில் உள்ள கோயில்கள், சிலைகள், சிற்பங்கள், விழாக்கள் வெளிச்சங் காட்டுகின்றன. பாளித் தீவில் மாபெரும் சரஸ்வதி ஆலயம் ஒன்று உண்டு. கல்வித்குத் தெய்வம் ஆனபடியால் அங்குள்ள பல்கலைக் கழகங்களிலும் கோயில் கொண்டருளி உள்ளாள்.

இந்துக்கள், வைஷ்ணவர், புத்தர், சமணர் எனப் பல்வேறு மதத்தினரும், நாட்டவரும், இனத்தவரும் வழிபடும் ஞானசக்தி கற்றவரும் கற்பவரும் வாலாயம் பண்ணி வணங்கும் கலைவாணி ஆவாள். கல்வியாளர் மட்டும் அன்றி கல்லாதாரும் தொழில் புரிவோரும் பக்தர்களும் போற்றி வணங்கும் காயத்திரியாவாள்.

சொல்லின் செல்வியாகிய வாணியின் அருள் பெற இவளைச் சூழ்ந்து எப்போதும் முனிவர்கள் பூசித்த வண்ணம் இருப்பார்கள் என்றும், கந்தர்வர்களும் தேவர்களும் கூட பாடல்கள் பாடி இசை மீட்டுப் போற்றி வணங்கினர் என்றும் புராணங்கள் கூறுகின்றன. ஒட்டக்கூத்தர், காளமேகம், கம்பர் போன்றோர் கலைவாணியின் கடாட்சம் பெற்றிருந்தனர் என வரலாறுகள் உண்டு. கம்பர் வழிபட்ட சரஸ்வதி கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள பத்மநாதபுரம் கோட்டையில் எழுந்தருளி இருப்பதாகக் கூறப்படுகிறது. அவர் வழிபடும்போது பாடிய பாடல் சரஸ்வதி அந்தாதி ஆகும். கம்பரது மகனைக் காப்பான் வேண்டிச் சரஸ்வதி மண்ணில் இறங்கி, கொட்டிக் கிழங்கு விற்கும் பெண்ணாகிக் கம்பருக்கு அருள் புரிந்ததாக வரலாறு. குமரகுருபர சுவாமிகள் சரஸ்வதி சகல கலைகளிலும் வல்லவள். ஆனமையால் அவள் மீது சகல கலா வல்லி மாலையை மனங் கசிந்துருகிப் பாடிச் சார்த்தி உள்ளார். சத்தி உபாசகரான மகாகவி பாரதியாரும் சரஸ்வதி கடாட்சம் பெற்றவர். அவள் மீது பக்திப் பரவஸ்தனாய்ப் பல பாடல்கள் பாடித் தந்துள்ளார். இவர்களது பாடல்கள் சரஸ்வதி பூசையின்போது ஓதி வழிபட்டு வல்லமை பெற வாய்த்துள்ள அரும் பொக்கிஷங்களாகக் கருதப்படுகின்றன.

சக்தி விழாவாக ஒன்பது இரவுகள் கொண்டாடப் பெறும் விழாவில் சக்தியின் அம்சமான ஞானசக்தியாகிய சரஸ்வதிக்கு இறுதி மூன்று நாட்களும் விழா எடுக்கப்படும். சரஸ்வதி வித்தைகள், அறிவு,


யுக்திக்கு மட்டுமன்றித் தூய்மை, மோட்சம், குருபக்தி ஹரிப் பிரீதி ஆகிய எல்லாவற்றுக்கும் அபிமானி ஆகையால் கோயில்கள், வீடுகள், கல்விக்கூடங்கள், எனச் சகல இடங்களிலும் சகல இந்துக்களும் கொண்டாடும் விழாவாக இது அமைந்துள்ளது. இறுதி நாளான ஒன்பதாம் நாள் மகாநவமி அன்று கலைவடிவில் ஞானரூபியான கலை மகளுக்குப் பெருவிழா எடுப்பர். மாணவர்கள் புத்தகங்கள், எழுது கோல்கள் என்பவற்றையும் வித்தைகள் பயில்வோர் தமது கருவிகளையும் பூசையில் வைத்துப் பூசிப்பர். தொழிலாளரும் தத்தம் ஆயுதங்களை வைத்து வணங்குவர். அதனால் மகா நவமி ஆயுத பூசை என்றும் பெயர் பெறும்.

இச்சக்தி விழாவில் தோரண அலங்காரத்துடன் கொலுவும் கோலமும் முக்கிய இடம் வகிப்பனவாகும். நவராத்திரி விழா எனும்போது எம் கண் முன் வருவது கொலுவேயாகும். கோலமும் கொலுவும் கலை உணர்வும் அழகும் தருவதுடன் ஆழ்ந்த தத்துவக் கருத்துக்களையும் அடக்கி உள்ளன. கொலுப் பொம்மைகள் பஞ்ச பூதங்களின் அடக்கமாகப் பிரதிபலிக்கின்றன. கொலுப்படியும் ஒன்பது என்ற கணக்கில் அமைய வேண்டும். பொம்மைகளும் ஒரு ஒழுங்கு முறையில் சீராக வைத்தல் முறைமை. முதற் படியில் கலசம், சிவன் மரப்பாச்சிப் பொம்மைகளும், இரண்டாம் படியில் விஷ்ணு தசாவதாரம் சம்பந்தப்பட்ட பொம்மைகளும், மூன்றாம் படியில் கிருஷ்ணன் சம்பந்தப்பட்ட பொம்மைகளும், நாலாவது படியில் அம்மன் சம்பந்தப்பட்ட பொம்மைகளும், ஐந்தாவது படியில் தாவர சங்கமப் பொருட்களும், ஆறாம் படியில் பறவைகள் மிருகங்கள் போன்ற உயிரினங்களின் பொம்மைகளும், ஏழாம் படியில் கடற் பொருள் மரப் பொருள்களும், எட்டாம் படியில் பழங்கள் காய்கறி வகைகள் செட்டியார்ப் பொம்மையும், ஒன்பதாவது கீழ்ப்படியில் சக்தியும் சிவனும் சம்பந்தப்பட்ட பொம்மைகளும் வைக்க வேண்டும் என்பது விதி முறை. கோலம் அழகுக் கலையைப் பிரதிபலிப்பதோடு அமையாது அரிசி மாக்கோலம் போடுவதால் எறும்பு போன்ற சிற்றுயிர்களுக்கும் உணவு கொடுத்தவர்கள் ஆகிறோம். நவராத்திரி நாட்களில் நவக்கிரக வழிபாட்டுக்கு உரிய கோலங்களை அவர்களுக்குரிய நாட்களில் கொலு முன் போட்டு வரின் நவக்கிரகங்களின் அருளைப் பெறமுடியும் என்பர்.

''இலங்குந் திருமுக மெய்யிற் புளகமெழுங் கண்கணீர்
மல்கும் பழுதற்ற வாக்கும் பலிக்கும் மனமிகவே
துலங்கு முறுவல் செயக் களிகூருஞ் சுழல் புயல் போல்
கலங்கும் பொழுது தெளியுஞ் சொன்மானைக் கருதினர்க்கே''


– சரஸ்வதி அந்தாதி – கம்பர்

# சைவசித்தாந்தத்தின் ஒளியை உலகெங்கும் பரப்பிய சற்குரு சிவாய சுப்பிரமுனிய சுவாமிகள் குருபூசை



சிவதொண்டன் தில்லையம்பலம் சிவயோகபதி
உலக சைவப் பேரவை –கனடா

சைவ உலகத்திற்கு அளப்பரிய சிவதொண்டு செய்வதற்கு 1927 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 5ஆம் திகதி வடஅமெரிக்காவில் கலிபோனியாவில் ஜனனம் செய்த ஒரு அவதார புருக்ஷர் எங்கள் குருதேவர் சற்குரு சிவாய சுப்பிரமுனிய சுவாமிகள். அவர் இளம் பராயத்திலேயே தமது பெற்றாரை இழந்துவிட்டார். இவரின் பூர்வ புண்ணியவசமாக இருபது வயதிலேயே இவருக்கு



ஆன்மீக உதயம் ஏற்பட்டு துறவு நிலைக்கு ஆளாகிவிட்டார். உலக பந்தங்களைத் துறந்து பரமசிவ தத்துவங்களின் மகத்துவத்தை உணர்வதற்காகத் தவத்திலும் தியானத்திலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். அவரது தூய்மையான யோகப் பயிற்சியினால் அவருக்கு முழுமையான ஞான அறிவு கிட்டியது.

குருவருளைப் பெற்று பின்பு திருவருளை அடையும் பெருநோக்குடன் ஞானபுருக்ஷரான குருதேவர் தமது இருபத்திரண்டு வயதில், கொழும்புத்துறையில், மிக எளிமையான முறையில் அன்பர்களுக்கு அருட்கடாட்சம் அருளிவந்த எங்கள் ஞானகுரு சிவயோகசுவாமிகளின் அருட்கண் பார்வையுடன், இளந்துறவியாகிய திருநாள் 1949 ஆம் ஆண்டு வைகாசிப் பூரணை தினமாகிய ஒரு நிறைந்த நாள். அன்றைய தினம் சிவயோகசுவாமிகள் இளந்துறவியாகிய குருதேவருக்குப் பஞ்சாட்சர மந்திரத்தை உபதேசித்து சுப்பிரமுனிய சுவாமிகள் எனும் நாமதீட்சை அளித்தார். தீர்க்கதரிசியான எங்கள் சிவயோகசுவாமிகள் சைவசித்தாந்த தத்துவங்களையும் சைவக் கோயில்கள் கட்டி எழுப்பும் திருப்பணிகளையும் முறையே உலகெங்கும் பரப்பியும் செயற்படவும் மிகப் பரந்த நோக்குடன் குருதேவரை இனங்கண்டு அந்தப் புனிதமான மிகப்பொறுப்புள்ள சிவதொண்டினைச் செய்யும்படி கட்டளையிட்டு, குருதேவருக்கு அருள்செய்தார்.

குருதேவரும் தமது குருவின் விருப்பப்படி அமெரிக்காவிற்குத் திரும்பி வந்து தனது ஞானகுரு உபதேசித்தபடி சிவப்பணியாக நிறைந்த மனதுடன் நெறி தவறாமல் ‘‘இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க’’ ‘‘மேன்மைகொள் சைவநீதி விளங்குக

உலகமெல்லாம்'' என்ற முழு நம்பிக்கையுடன் கர்ம வீரராகச் செயற்பட ஆரம்பித்தார். உலகம் முழுவதும் வியந்து பாராட்டத்தக்க சிவதொண்டுகள் பல ஆக்கபூர்வமாக செய்தார்.

உலகத்தின் கிழக்கில் இந்தியாவிலே ஒரு புண்ணிய காசிசேஷத்திரம் போல், சைவ மக்களுக்கு மேற்கில் அமெரிக்காவில் வைலுவ நதிக்கரையில் அமைந்திருக்கும் குவை சைவ சித்தாந்த ஆச்சிரமும் அங்கு வெகுவிரைவில் பிரதிஷ்டை செய்யப்படவிருக்கும் சன்மார்க்க இறைவன் கோயில், மிக அற்புதமாக முறைகளில் நிர்மாணிக்கப்பட்டு வருகிறது. இதன் திருப்பணிகள் பூரணமாக நிறைவேறுதற்கு உலகெங்கும் வாழும் சைவ மக்கள் யாவரும் குவை சைவசித்தாந்த ஆச்சிரமத்துடன் தொடர்பு கொண்டு நன்கொடையாக நிதி வழங்கி குருதேவருக்கு எங்கள் நன்றிக்கடனைச் செலுத்துவது முக்கிய கடமையாகும்.

சைவ உலகின் ஒளிச்சுடராக விளங்கிய குருதேவர் அவர்கள் 13ஆம் திகதி நவம்பர் மாதம் 2001 ஆம் ஆண்டில் கனடா நேரப்படி காலை 5:54 மணியளவில் மகாசமாதியாகி சிவனின் பொற்பாதங்களை அடைந்து சிவசோதியுடன் கலந்து கொண்டார்.

ஒரு பொல்லாப்புமில்லை
எல்லாம் எப்பவோ முடிந்த காரியம்
நாம் ஒன்றுமறியோம்
முழுவதும் உண்மை. – சிவயோக சுவாமிகள்

குருதேவர் சமாதி நிலை அடைந்து 15 வருடங்கள் பூர்த்தியாகிய 15 வது மகா குருபூசை, ஐப்பசித் திங்கள் சித்திரை நட்சத்திரமன்று ஒக்டோபர் மாதம் 29 ஆம் திகதி, 2016, சனிக்கிழமை ஆகும். இந்த நிலையில் சைவசமய அன்பர்கள் யாவரும் எங்கள் நாளாந்த காலை, மாலை கடவுள் வழிபாடுகளிலும், பிரார்த்தனை களிலும் எங்கள் குருநாதன் சிவயோக சுவாமிகளையும், சற்குரு சிவாய சுப்பிரமுனிய சுவாமிகளையும் மனம் கசிந்து வழிபடுவோமாக! எங்கள் நாளாந்த வாழ்க்கையிலும் அவர்கள் காட்டிய வழியில் ஆணவத்தை நீக்கி, ஆன்ம ஈடேற்றத்திற்குச் சிவநாமத்தைச் சொல்லி ஒளிமயமான வாழ்க்கைப் பாதையில் செல்வோமாக!

வாழ்க, வாழ்க சிவயோக குருபரன் திருவடி வாழ்க!
வாழ்க, வாழ்க குருதேவர் திருநாமம் வாழ்க!
வாழ்க, வாழ்க, மேன்மைகொள் சைவநீதி வாழ்க!
வாழ்க, வாழ்க, இவ்வையகம் வாழ்க!
ஓம் நமசிவாய! ஓம் சாந்தி!

# நோய் தீர்க்கும் விமலன்



(தமிழ்ப் பேரறிஞர் வாகீச கலாநிதி கி. வா. ஜகந்நாதன்)

சிவபெருமானுக்கு அன்பர் அவர். அவர் அன்பு வளர்ந்த வரலாறே அழகானது. இளம் பருவத்தில் பெரியவர்களோடு கோயிலுக்குச் செல்வது வழக்கம். அவர்கள் இறைவனைக் கும்பிடும்போது அவரும் வழிபட்டார். இந்தப் பழக்கத்தால் தென்னங் குரும்பையில் நீர் புகுந்தது போல அவர் உள்ளத்தில் அன்பு தலைப்பட்டது. பெரியவர்கள் கோயிலுக்குப் போகாத நாளிலும் அவர் போய் வந்தார். அவர் வளர்ந்தார்; அவர் அன்பும் வளர்ந்தது.

கோயிலுக்குள் போய் இறைவன் திருமுன் விழுந்து வணங்கி உள்ளம் கசிந்து வாயாரப் பாடும் இயல்புடைய அவர், கோயிலுக்குப் போகாத போதும் கோபுரத்தைக் கண்டால் கும்பிடு போடுவார்; தலை வணங்குவார்; உள்ளம் கசிவார். பிறகு அடியர்களைக் கண்டபோது சிவபெருமானை நினைந்து கையால் அஞ்சலி செய்வார்; தலை சாய்ப்பார்; உள்ளம் கசிவார். இந்த நிலையும் தாண்டியது. எந்த இடத்திலும் எந்தக் காலத்திலும் இறைவனை நினைத்துக் கொள்வார். உடனே கையைக் குவித்துத் தொழுது தலை சாய்த்து உள்ளம் குழைவார்.

இறைவன் திருமுன் வீழ்ந்து வணங்குவது முறை. கையைக் குவித்துத் தொழுதல் ஒருமுறை. வீழ்ந்து வணங்கினாலும் மீண்டும் எழுந்து கையைக் குவிப்பது வழக்கம். அப்படிக் குவிப்பது எதைக் காட்டுகிறது? கை செய்கைக்கு அடையாளம். செயலில் ஊற்றம் இல்லாதவனைக் கையாலாகாதவன் என்று சொல்கிறோம். கையைக் குவித்து நிற்பது, "இறைவனே. நான் செயலொழிந்தேன். என் செயலென்று யாதொன்றும் இல்லை. எல்லாம் நின் செயலே" என்பதைக் காட்டும் அடையாளம். எல்லாம் இறைவன் செயலே என்று உணர்ந்து செயலற்று நிற்பதே ஞானம் நிறைந்த நிலை. அதை நினைவூட்டவே அஞ்சலி செய்கிறோம்.

தலை நிமிர்ந்து நிற்பது சில இடங்களில் வீரத்தையும் சில இடங்களில் அகங்காரத்தையும் காட்டும். தீயனவற்றைக் கண்டபோது அஞ்சாமல் நிமிர்ந்து நிற்க வேண்டும். நல்லவர்களைக் கண்டால் நாம் இவர்க்கு முன் எம்மாத்திரம் என்று தலை குனிந்து நிற்க வேண்டும். தலை குனிவது நாணத்துக்கும் பணிவிற்கும் அடையாளம்

இறைவன் முன் தலை வணங்கி நிற்பது, “இதுகாறும் இறைவனைக் காணாமல் பல நாட்களைப் போக்கி விட்டோமே!” என்ற நாணத்தையும், “இறைவனுக்கு முன் நாம் எல்லாம் எம்மாத்திரம்?” என்ற பணிவையும் எடுத்துக் காட்டும். இறைவன் முன் தலை வணங்கினவர் இடும்பையின் முன் தலை நிமிர்ந்து நிற்பர்.

கை தொழுவது, தலை வணங்குவது ஆகிய செயல்கள் போலியாக இருந்தால் பயன் இல்லை. உள்ளத்திலே அன்பு இன்றி, இப்படிச் செய்தால் பிறர் நம்மை அன்பர் என்று எண்ணிப் பாராட்டுவார்கள் என்ற எண்ணத்தோடு செய்யும் வணக்கம் தம்மைத் தாமே ஏமாற்றும் தொழில். உள்ளம் கசிந்து எழும் அன்பினாலே இறைவனைக் கையால் தொழுதும் தலை சாய்த்து வணங்கியும் வாழும் அன்பர்கள் இறைவனுடைய அருளைப் பெறுவார்கள்.

அன்பு வளர வளர்ந்த பெரியார் கையால் தொழுது தலைசாய்த்து உள்ளம் கசிந்து வாழ்பவர். அவருக்கு முன்பு உடம்பில் ஏதோ நோய் இருந்தது. மெய்யிலே ஆர்ந்த அந்தக் குறையை அவர் பொருட்படுத்தினாரோ இல்லையோ, யாரும் அறியார். ஆனால் நாளடைவில் அந்த நோய் இருந்த இடம் தெரியாமல் ஒழிந்து போயிற்று. அவர் உடம்பிலே பொலிவும், முகத்திலே தேசும் உண்டாகி விட்டன. அவர் திருமேனியிலே பூசும் வெண்ணீறு அந்த மேனிக்குப் பின்னும் எழிலை ஈந்தது.

அவர் மனிதர் தாமே? மனம் படைத்த மனிதர்களுக்கு எல்லாம் துயரம் இருப்பது இயல்பு. உடம்பிலே நோயும் உள்ளத்திலே துயரும் வாட்ட வாடுபவர்கள் மனிதர்கள். உடம்பிலே உள்ள நோயையாவது மருத்துவர்களை அணுகி அவர்கள் ஈயும் மருந்துகளை உண்டு போக்கிக் கொள்ளலாம். ஆனால் மன நோய்க்கு மருந்து இல்லை.. இறைவன் அருளைத் துணையாகக் கொண்டாலன்றி மனக்கவலை மாறாது.

“தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க்கு அல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது.” –குறள் 8

என்பது வள்ளுவர் வாய்மொழி.

முன்னே சொன்ன அன்பருக்கு மெய்யிலே இருந்த நோய் பெரிதல்ல. அவர் மனத்திலே இருந்த துயர்கள் எல்லாம் போயின. மாசு மறுவற்ற அந்த மனத்தின் முழு இடத்திலும் இறைவன் வெளிப்பட்டு அமர்ந்திருக்கும்போது மற்றொன்றிற்கு அங்கே இடமேது?

இப்படி அவர் ஒருவர் மட்டுமா இருக்கிறார்? பல்லாயிரம் அன்பர்கள் இருக்கிறார்கள். நமக்கு அவர்களைத் தெரிந்து கொள்ளும் பாக்கியம் கிடைப்பதில்லை. தெரிந்து கொண்டவர்களுக்கு அவர்களுடைய பெருமை தெரியும். அவர்களுடைய மெய்யில் ஆர்ந்து குறையையும் மனத் துயரத்தையும் தீர்க்கும் விமலனாகிய இறைவனுடைய பெருமையும் தெரியும். அந்தப் பெருமை தெரிந்த ஞானசம்பந்தர் சொல்லுகிறார்.

கையால் தொழுது தலை சாயத்து
உள்ளம் கசிவார்கள்.
மெய்ஆர் குறையும் துயரும்
தீர்க்கும் விமலனார்.

அந்த விமலனைப் பற்றிய நினைவு நீளுகிறது. அன்பர்கள் அவனை வழிபடும் வகைகளை நினைக்கிறார். பூசை செய்யும் பொற்பை எண்ணுகிறார். அவனை அபிடேகம் செய்யும் காட்சி அவர் நினைவுக்கு வருகிறது. இறைவன் உருவம் இல்லாதவன் ஆயினும் தன்னை நினைக்கச் செய்யும் உருவத்தை அமைத்து வழிபடுபவர்களுக்கு அருள் புரிகிறான். அவர் புரியும் வழிபாடுகளை ஏற்றுக் கொள்கிறான். அன்பர்கள் அவர் திருவுருவத்தை எண்ணெயால் முழுக்காட்டுகிறார்கள். மந்திரம் சொல்லித் தோத்திரம் சொல்லி அபிஷேகம் செய்கிறார்கள். அவர்கள் ஆட்டும் நெய்யிலே ஆடுகிறான் இறைவன். நெய் மாத்திரந்தானா? வேறு பல திரவியங்களும் உண்டு. அவற்றுள் முக்கியமானது பஞ்ச கவ்வியம்; ஆன் அஞ்சு; பசு மாட்டிலிருந்து கிடைக்கும் ஐந்து பொருள்கள். பால், தயிர், நெய், கோமயம், கோசலம் என்னும் ஐந்தும் இணைந்ததைப் பஞ்ச கவ்வியம் என்றும் ஆன் ஐந்தும் என்றும் கூறுவர்.

''ஆவினுக்கருங்கலம் அரன் அஞ்சாடுதல்''
என்று வாகீசப் பெருந்தகையார் திருவாய் மலர்ந்தருளினார்.

இறைவன் அன்பர்கள் ஆட்டும் நெய்யிலே ஆடுவான். அவர்கள் கலந்து ஆட்டும் ஆனஞ்சிலும் ஆடுவான். இப்படி அன்பர்கள் பூசிக்கும்படியாக உருவமும் திருக்கோயிலும் தலமும் உடையவனாக அவன் இருக்கிறான்.

நெய் ஆடுதல் அஞ்சு உடையார்
நிலாவும் ஊர் போலும்

அவன் எழுந்தருளியிருக்கும் திருத்தலங்களுக்குள் ஒன்று திருப்பாசூர். அது தொண்டை நாட்டில் உள்ளது. குறிஞ்சி நிலப்பண்பு மிக்கு இருப்பது. அங்கே காந்தட் செடிகள் பூத்து நிற்கின்றன. காந்தள் என்பது வேலிக்காலில் வளரும் ஒரு வகைச் செடி. அதன் மலர் கைவிரல்களைப் போல இருக்கும். அதன் பூவைத் துடுப்பென்று பழம் புலவர்கள் சொல்வார்கள். தூரத்திலிருந்து பார்த்தால் பாம்பு படம் எடுத்தாற் போல இருக்கும். படத்தையுடைய நாகத்தைப் போன்ற தோற்றத்தை உண்டாக்கும் காந்தள் மலிந்த ஊர் பாசூர். இயற்கையின் எழில் நலத்தோடு இறைவனுடைய அருள் நலத்தையும் இணைத்துக் காட்டுபவர் ஆளுடைய பிள்ளையார்.

. . ஊர்போலும்
பைவாய் நாகம் கோடல் ஈனும் பாசூரே

இறைவனுடைய நினைப்போடு காந்தளைப் பார்க்கின்ற கண்களுக்கு வேறு பொருள் உவமையாகத் தோன்றவில்லை. அப்பெருமான் அணிகின்ற நாகந்தான் உவமையாக வருகிறது. பை (படம்) வாய்ந்த நாகத்தைக் கோடல் (காந்தள்) ஈனுகின்றதாம்.

கையால் தொழுது தலை சாயத்து உள்ளம் கசிவார்கள்.
மெய்ஆர் குறையும் துயரும் தீர்க்கும் விமலனார்.
நெய் ஆடுதல் அஞ்சு உடையார் நிலாவும் ஊர் போலும்
பைவாய் நாகம் கோடல் ஈனும் பாசூரே.


{கையினாலே கும்பிட்டுத் தலை வணங்கி உள்ளம் உருகும் அன்பர்களுடைய உடம்பிலே பொருந்திய குறைகளாகிய நோய்களையும் (மனத்திலே பொருந்திய) துயரங்களையும் போக்கும் மலமற்ற தூயரும், நெய்யில் ஆடுவதையும் பஞ்சகவ்வியத்தில் ஆடுவதையும் உடையவரும் ஆகிய சிவபெருமான் எழுந்தருளியிருக்கும் திருப்பதி, படம் வாய்ந்த நாகத்தின் தோற்றத்தைக் காந்தள் தன் மலரால் உண்டாக்கும் பாசூர் ஆகும்.

கசிவார்கள் – உருகும் அன்பர்கள், துயர் – மனத்தைச் சார்ந்தது. நெய் – பசுவின் நெய், எண்ணெயும் ஆகும். ஆடுதல் என்பதை நெய் ஆடுதல் என்றும் அஞ்சு ஆடுதல் என்றும் இரண்டு இடத்தும் கூட்ட வேண்டும். இது நடுநிலை விளக்கு. நிலாவும் – தங்கியிருக்கும். போலும்; அசைநிலை. பை –படம், வாய் – வாய்ந்த, நாகம் – நாகத்தின் தோற்றம்; ஆகுபெயர். கோடல் – காந்தள், ஈனும்–உண்டாக்கும். விமலனார், உடையார் ஊர் பாசூர். ஏ; அசைநிலை.}

சென்ற இதழ் தொடர்ச்சி

# சைவத்தை அறியுங்கள்

(சித்தாந்தரத்தினம், கலாநிதி க. கணேசலிங்கம்,
அன்புநெறி சிறப்பாசிரியர், மன்றக்காப்பாளர்)



## 8. சைவக் கோயில்கள்

கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பது ஆன்றோர் வாக்கு. எல்லாச் சமயங்களும் திருக்கோயில் வழிபாட்டை வலியுறுத்துகின்றன. கோயில் (கோ + இல்) என்பதன் பொருள் பதி அல்லது தலைவன் ஆகிய இறைவன் எழுந்தருளும் இல்லம் என்பதே. ஆலயம் என்பதும் கோயிலைக் குறிக்கும் சொல். ‘ஆ’ என்பது ஆன்மாவையும் ‘லயம்’ என்பது சேர்தல் (லயித்தல்) என்பதையும் குறிப்பன. ஆகவே, ஆலயம் என்ற சொல் ஆன்மா இறையருள் பெற்று இறைவனுடன் சேர்வதை உணர்த்துகின்றது.

### திருக்கோயில் அமைப்பு

சைவக் கோயில்களைச் சைவ ஆகமங்கள் கூறும் விதிமுறைகளின்படி அமைத்தல் மரபு. கோயில் அமைக்கப்பெறும் இடத்தைத் தேர்ந்தெடுத்தல், நிலத்தை அகழ்ந்தபின் செய்யவேண்டிய கிரியைகள், கோயிலின் அமைப்பு முறை, இறை மூர்த்தங்கள் எழுந்தருளும் இடங்கள், அவற்றை எழுந்தருளச் செய்யும் கிரியை முறைகள் ஆகிய பல செய்திகளை ஆகமங்களில் காணலாம். இவற்றை அறிந்த சிவாச்சாரியார், சிற்பக் கலைஞர், அறிஞர் ஆகியோரின் துணையுடன் கோயில்கள் கட்டப்பட வேண்டியது அவசியம்.

ஆலய அமைப்பில் சில உட்கருத்துக்கள் உள்ளன என்பதை ஆகமங்களிலிருந்து அறியலாம். உடம்பில் உயிர் விளங்குவது போன்று திருக்கோயில்களில் இறைவன் விளங்குகிறான். ஒருவகையில் பார்த்தால் மனித உடல் போன்றே ஆலயங்கள் அமைந்துள்ளதைக் காணலாம். கோயிலின் மூலத்தானம் அல்லது கர்ப்பக்கிரகம் என்று கூறப்படும் கருவறை இறைவன் அருள் சுரக்கும் திருவுருவம் கொண்ட இடம். இது மனித உடம்பிலுள்ள தலை எனக் கொள்ளலாம். இதுபோல் அர்த்த மண்டபம் – கழுத்து, மகாமண்டபம் – மார்பு, யாகசாலை – நாபி, ஸ்தப மண்டபம் – தொடை அல்லது உடலின் கீழ்ப்பாகம், கோபுரம் – பாதம் என்று கொள்வதுண்டு. இன்னொரு வகையாக, கோபுரம் – வாய், நந்தி – நாக்கு, கொடிமரம் –

உள்நாக்கு, தீபங்கள் – இந்திரியங்கள், கருவறை – இதயம், சிவலிங்கம் – உயிர் என்று ஒப்பிடுவதுமுண்டு.

கருவறையின் மேலுள்ள விமானம் மேலே போகப்போகக் குறுகி இருக்கும். உலகப் பற்றைச் சிறிது சிறிதாக விட்டு இறையருளை நோக்கி ஆன்மா வளர்வதை இது உணர்த்துகிறது. விமானத்தின் மேலுள்ள குடம்போன்ற கலசம் திருவருள் வெளியில் ஆன்மா ஒன்றித் திளைப்பதைக் குறிக்கும். கருவறையிலுள்ள மூலமூர்த்தி கருங்கல்லால் ஆனது. சிவன் கோயிலில் இலிங்கமும் பிற கோயில்களில் அக்கோயில்களின் பெயருக்கேற்ற இறை மூர்த்தங்களும் மூலமூர்த்திகளாக இருக்கும். திருவிழா நாளில் உலாவரும் உற்சவ மூர்த்தி மகாமண்டபத்தில் உள்ளது. இது பஞ்சலோகங்களால் செய்யப்பட்டது. இறைவனின் ஐந்தொழில் அல்லது பஞ்ச கிருத்தியங்களுக்குரிய ஆற்றலைக் குறிப்பது இந்தப் பஞ்ச லோகங்கள்.

## நந்தி, பலிபீடம், கொடிமரம்

ஸ்தப மண்டபத்தில் மூன்று முக்கிய உருவங்கள் உள்ளன. நந்திதேவர், பலிபீடம், கொடிமரம் ஆகியவை இவை. நந்தியும் பலிபீடமும் கருங்கற்களால் ஆனவை. கருவறையிலுள்ள மூலமூர்த்தியும் நந்தியும் பலிபீடமும் முறையே பதி, பசு, பாசம் ஆகிய முப்பொருளைக் குறிப்பன. இங்குள்ள நந்திதேவர் பரிசுத்த மடைந்த ஆன்மாவைக் குறிப்பது. கோயிலில் சென்று கும்பிடும்போது, எமது பாசம் நீங்குவதைப் பலிபீடமும், இறைவனை அடைதலையே உயிர் அறமாகக் கொள்ள வேண்டு மென்பதை நந்தியும் என்றும் அருள் செய்யும் இறைவனைத் துதித்து அவனை அடையவேண்டும் என்பதை மூலமூர்த்தியும் உணர்த்துகின்றன. சிவன் கோயில்களில் நந்தி இருப்பது போன்று பிற கோயில்களில் அவற்றின் மூலமூர்த்தியுடன் தொடர்பான வடிவம் இருக்கும்.

கோயிலிலுள்ள கொடிமரம் பதியையும் கொடிச்சீலை பசுவையும் தர்ப்பக் கயிறு பாசத்தையும் குறிக்கும். ஆன்மா பாசத்திலிருந்து நீங்கி இறையருள் வழி நின்று மேல்நிலையான முத்தியடைவதைக் குறிப்பது கொடியேற்ற விழா. கொடிமரத்தில் ஆறு வட்டவடிவான முடிச்சுக்கள், சம தூர இடவெளியில் உள்ளன. இந்த முடிச்சுக்கள் உடம்பிலுள்ள ஆறு ஆதாரங்களைக் குறிப்பன. கொடி மரத்தை நடு நாடியான சுழுமுனையாக் கொண்டு ஆறு முடிச்சுக்கள் குறிக்கும் ஆறு ஆதாரங்கள் வழியாகக் குண்டலினி

சக்தியை எழுப்பி இறைவனுடன் ஒன்றும் யோக நெறியையும் கொடிமரம் குறிக்கிறது.

## தேர், தீர்த்தம், திருவிழா

கொடியேற்றத்துடன் திருவிழா தொடங்கி இறுதியில் தேர், தீர்த்தம் ஆகிய விழாக்கள் நடைபெற்றுக் கொடி இறக்கத்துடன் முடிவுறும். நாலு பெரிய சில்லுகள் கொண்ட அகன்ற அடிப்பாகத்தை உடையது தேர். மேல் நோக்கி அதன் சுற்றளவு குறைந்து கொண்டு போகும். அடிப்பாகம் நாம் வாழும் உலகத்தைக் குறிப்பது. ஆன்மாவின் கேவல நிலையையும் இது குறிக்கும்.

உயிர்கள் பிறவிகள் எடுக்கமுன் ஆணவத்துடன் சேர்ந்திருந்த நிலை கேவலநிலை. பிறவிகள் எடுத்துக் கலை முதலிய தத்துவங் களுடன் சேர்ந்த நிலை சகலநிலை. ஆன்மா வளர்ச்சியடைந்து பாசத்தில் இருந்து நீங்கிய நிலை சுத்த நிலை. தேரின் நடுப்பாகம் அலங்கரிக்கப்பட்டு இறைவன் எழுந்தருளும் பீடம் அமைந்துள்ளது. இது சகலநிலையைக் குறிக்கும். சகலநிலை ஆன்மாக்கள் இறைவனை இடையறாது வழிபட்டு அருள்பெற்று உய்ய வேண்டும் என்பதை இறைவன் அமர்ந்துள்ள நடுப்பாகம் உணர்த்துகிறது. தேரின் மேற்பாகம் சிவப்பு, வெள்ளை நிறச் சேலைகளால் மாறி மாறி ஐந்து வட்டங்களாகச் சுற்றப்பட்டு ஒடுங்கிச் செல்லும். இது ஐந்து சிவ தத்துவங்களையும் ஆன்மாவின் சுத்த நிலையையும் குறிக்கும். மேலே இருக்கும் முடி அல்லது கலசம் முத்தி நிலையைக் குறிப்பது. தேர் என்ற சொல்லே உலக வாழ்க்கையைத் தேர்ந்து இறைவனை அறிதல் என்ற பொருளைத் தருகிறது.

தேர்த்திருவிழாவை அடுத்து வரும் தீர்த்தம், அருள் வெள்ளத்தில் குளித்து ஆன்மா இறையின்பத்தை அனுபவிப்பதை உணர்த்துகிறது. ஆன்மாவின் மலங்கள் நீங்கி சத்திநிபாதம் (இறையருள் வீழ்ச்சி) உண்டாவதைக் குறிப்பது தீர்த்தத் திருவிழா.

திருவிழாக் காலங்களிலும் விசேட விழாக்காலங்களிலும் இறைவன் பலவித வாகனங்களில் அமர்ந்து வீதி வலம் வந்து அருள்புரிகிறான். எல்லா உயிர்களுக்கும் இறைவன் உடனிருந்து எப்பொழுதும் அருள்புரிவதை இது குறிக்கிறது. அத்துடன், என்றுமே அவன் ஆண்டவன், ஆன்மாக்கள் அடிமைகள் என்பதையும் உணர்த்துகிறது.


..தொடரும்

சென்ற இதழ் தொடர்ச்சி

# என் நெஞ்சில் இடங்கொண்ட ஒரு பெரியர்

(திரு. மு. வைரமுத்து ஜே. பி. முன்னாள் சி.சி.எஸ்)

## 8. எட்டிலும் எண்பதிலும்



பஞ்சாட்சரத்தை ஓதுவதனால் நன்னெறி கைகூடும் என்பதில் ஐயமில்லை. ஆனால் ஓதும் முறையைச் சொல்லவந்த திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகள்

"காதலாகிக் கசிந்து, கண்ணீர் மல்கி"

ஓத வேண்டும் என்கிறார். காதலாகிக் கசிதல் உள்ளத்தில் நிகழ்வது; கண்ணீர் மல்குதல் காயத்தில் நிகழ்வது. ஓதுதல் வாக்கில் நிகழ்வது. இவை மூன்றும் ஒன்றித்து நிகழ்ந்தக்கால் பெறப்படும் பயன்தான் நன்னெறி ஆகும். அன்றிக் கிளிப்பிள்ளை போல வாயினால் மாத்திரம் எத்தனை முறைதான் பஞ்சாட்சரத்தைச் செபித்தாலும் நன்னெறியாகிய பயன் இல்லை என்க. வைத்தியன் சொன்ன மருந்தை விதிப்படி உட்கொள்ளாது அதன் பெயரை ஆயிரத்தெட்டுத்தரந்தான் செபித்தாலும் நோய் மாறுமோ?

வழிபாட்டில் முக்கியமாகச் சம்பந்தப்பட வேண்டியது உள்ளம் (மனம்).

"அழுதால் உன்னைப் பெறலாமே"

என்று மணிவாசகர் புலம்பியதன் பொருளும் இதுவே. காயத்தின் செயலாகிய அழுகை உள்ளத்தெழுகின்ற அளவற்ற காதல் காரணமாக உண்டாகும் நெகிழ்ச்சியின் பிரதிவிம்பம். உள்ளத்து அன்பில்லாது செய்யப்படும் சம்பிரதாயங்கள் யாவும் புறக்குடத்தில் வார்த்த தண்ணீர் போலப் பயனற்றனவாகும்.

"கையொன்று செய்ய விழியொன்று நாடக், கருத்தொன்று எண்ணப்
பொய்யொன்று வஞ்சக நாவொன்று பேசப், புலால் கமழும்
மெய்யொன்று சாரச், செவியொன்று கேட்க, விரும்பும் யான்
செய்கின்ற பூசையெவ்வாறு கொள்வாய்? வினை தீர்ப்பவனே".

என்னும் பட்டினத்தடிகள் திருவாக்கு நாம் ஆழ்ந்து சிந்திக்கத்தக்கது. அருமையாகக் கிடைத்த இந்த மானுட தேகம் விழும் வரையும்

"சீலை தோய்ப்பதிலும், செம்பு மினுக்குவதிலும்"

காலத்தைப் போக்கினால், இறைவன் திருவருள் கைகூடுவது

எப்போது? மனிதன் வாளா பிறந்து இறந்து மடிகின்றானே என்ற நினைப்பே, கருணைக் கடலாகிய யோகர் சுவாமிகளின் நெஞ்சக் கவலையைத் தூண்டியது என்பது வெளிப்படை.

இந்தக்கோயில், அந்தக் கோயில், என்று மாறி மாறிப் பறந்தடித்துத் திரிகின்ற யாழ்ப்பாணத்து மக்கள், கோயிலுக்குச் சென்றும் அங்கு அமைதியாக மனமொன்றி நின்று வழிபட முடியாது வேடிக்கையில் புலன்களை ஓடவிடும் அம்மக்கள், தாக சாந்திக்கு கானல் நீரை நாடி அலைபவர் போலாகின்றனர். இவர்கள் யோகர் சுவாமிகளின் நற்சிந்தனைப் பாக்களைப் பாராயணம் செய்வார்களாயின் மேலான பலனைப் பெறுவர்கள். இறைவழிபாடு வெறும் சம்பிரதாயங்களிலும், கிரியைகளிலும் மட்டுந் தங்கியிருக்கவில்லை. உள் அன்பு இல்லாப் புறவழிபாடு மருந்தை விட்டு அநுமானத்தை மாத்திரம் அருந்துவதற்குச் சமனாகும்.

பெறுதற்கரிய பிறவியைப் பெற்றும் இறைவன் தன் திருவடிகளைக் குறுகிப் பணிந்து, பிறவிப் பயனைப் பெறக் கற்றுக் கொண்டோம் இல்லையே!

"முத்திக்கு வழியை மொழியக் கேண்மோ! சத்தியம், பொறுமை, சாந்தம் அடக்கம், நித்தியா நித்தியவத்து. விவேகம், பத்திசெய் அடியாரைப் பணிதல், பகலவன் எழுமுன் எழுதல், இரும் புனலாடல், வழுவில் ஐந்தெழுத்தும் வரன்முறை பயிலல், குருபதம் பணிதல், கோல நீறணிதல், வரும் பசிக்குண்ணல், வாயுற வாழ்த்தல், சாத்திரம் பயிலல், தன்போல் பிறரைப் பார்த்தல், பணப் பற்றொழித்தல், பண்புடன் வார்த்தையாடல், வாதனை தீர்த்தல், கோத்திரம் குலமெனும் கோட்பாடொழிதல், எட்டுணையேனும் வேண்டுதல் வேண்டாமையின்றி என்றும் ஆண்டவன்அடிக் கீழ் அமர்ந்து வாழ்தலே."

இது யோகர் சுவாமிகளின் திவ்விய திருவாய்மொழி.

"புவனியில் போய்ப் பிறவாமையின், நாள்நாம்
போக்குகின்றோம் அவமே இந்தப் பூமி,
சிவன் உய்யக் கொள்கின்ற ஆறு' என்று நோக்கி,
திருப்பெருந்துறை உறைவாய்! திருமால் ஆம்
அவன் விருப்பு எய்தவும், அலரவன் ஆசைப்
படவும், நின் அலர்ந்த மெய்க் கருணையும், நீயும்,
அவனியில் புகுந்து, எமை ஆட்கொள்ள வல்லாய்!
ஆர் அமுதே! பள்ளி எழுந்தருளாயே!"

என்று, பூவுலகில் பிறவி எடுத்தலின் பெருமையை வாயாரப் புகழ்ந்து பாடுகின்றார் மாணிக்கவாசகப் பெருந்தகை. இவ்வாறு அருமையாகக் கிடைத்த சந்தர்ப்பத்தை வெளி வேடங்களிலும், விண்ணாணங்களிலும் வீணாக்கி விடுதல் எவ்வளவு அறியாமை!

"வித்தாரமாகக் கதை பேசி கொள்ளுவோம், வீணருடன் கூடி விளையாடிக் கொள்ளுவோம், சத்தி சிவம் ஒன்றான தன்மையைக் காண்கிலோம், சாதனையால் வேதனையைத் தீர்க்கிறோமில்லை."

"அலங்காரமாக ஆடை அணிந்து கொள்ளுவோம். அங்கும் மிங்கும் எங்கும் அலைந்து திரிகுவோம், கலங்காத நன்னெறியிற் செல்கிறோமில்லைக், கந்தா! முருகா! வென்று கத்திக் கொள்ளுவோம்."

யாழ்ப்பாணத்து மக்கள் போக்கைப் படம் பிடித்துக் காட்டுகிறார் யோகர் சுவாமிகள்.

கோயில்களுக்கும், திருவிழாக்களுக்கும், சமயச் சடங்குகளுக்கும், மேடைப் பிரசங்கங்களுக்கும், பஜனைக் கோஷ்டிகளுக்கும், ஏன், யாகங்களுக்கும், யோகங்களுக்குத் தானும் நம் நாட்டில் குறைவேயில்லை. இவையெல்லாம் மக்களின் ஆன்ம நலத்தை வளர்த்திருக்கின்றனவா என்பது ஆழ்ந்து சிந்திக்கத் தக்கது. எங்கே பார்த்தாலும் சுயநலம் தலை விரித்தாடுகிறது. அநீதியும் அட்டூழியங்களும் பாதகங்களும் மலிந்து, ஏழைகளையுஞ்சரி செல்வந்தர்களையும் சரி வாட்டுகின்றன. பல்லாண்டுகளாக நம்முன்னோரும் நாமும் செய்த தெய்வ வழிபாடு என்னவாயிற்று? எங்கே பார்த்தாலும் கபடமும், சூதும், வாதும். கோயில்கள் களியாட்டு அரங்குகளாய் மாறி வருகின்றன.

"நெக்கு நெக்கு நினைப்பவர் நெஞ்சுளே
புக்கு நிற்கும் பொன்னார் சடைப் புண்ணியன்,
பொக்கம் மிக்கவர் பூவும் நீரும் கண்டு
நக்கு நிற்பவர் அவர் தம்மை நாணியே."

பொக்கம், பொய், நிலையில்லாதனவற்றை நிலையானவை எனக் கருதும் பொய். இந்தநிலை, அப்பர் சுவாமிகள் காலத்திலும் இருந்திருக்கிறது போல் தெரிகிறது.

– தொடரும்

**மன்றத்தில் நிகழ்ந்தவை**

## பரதியார் நினைவு தினம்


பாரதியார் நினைவு நாள் செப்ரெம்பர் மாதம் 16ம் திகதி, 2016 வெள்ளிக்கிழமை மிசிசாகா யாழ் கூட்டுறவு இல்ல மண்டபத்தில் நடைபெற்றது. வழிபாடு மாலை 7:30 மணிக்கு ஆரம்பித்தது. முதலில் கூட்டு வழிபாடும் பூசையும் இடம் பெற்றன. தொடர்ந்து பாரதியார் பற்றிய மாணவர்களது பேச்சுக்களும், பாடல்களும் இடம் பெற்றன. இறுதி வழிபாட்டுடன் இனிதே விழா நிறைவு பெற்றது.

## அமரர் தத்துவ கலாநிதி, பண்டிதமணி, சிவத்தமிழ் வித்தகர் சிவத்திரு. க. வைத்தீசுவரக்குருக்கள் அவர்களது 100 ஆவது அகவை நிறைவு நினைவு வழிபாடு

மேற்படி வழிபாடு 23–09–2016 வெள்ளிக்கிழமை மிசிசாகா யாழ் கூட்டுறவு இல்ல மண்டபத்தில் நடைபெற்றது. வழிபாடு மாலை 7:30 மணிக்கு ஆரம்பித்தது. முதலில் கூட்டு வழிபாடும் பூசையும் இடம் பெற்றன. இந்நிகழ்வில் குருக்கள் ஐயாவின் அரும்பணிகளை தலைவர் திரு. தி. விசுவலிங்கம் அவர்கள் நினைவு கூர்ந்தார். மேலும் அவர் குருக்கள் அவர்களின் 100 ஆவது அகவை குறித்து "மகாமகோபாத்தியாய பண்டிதமணி மு. கதிரேசச்செட்டியார் அவர்கள் எழுதிய திருவாசகம்–திருவெம்பாவை கதிர்மணிவிளக்கப் பேருரை" என்ற நூல் 100 ஆண்டு நிறைவு நினைவு வெளியீடாக விரைவில் வெளிவரும் என அறிவித்தார். பிரசாதம் வழங்கலுடன் வழிபாடு இனிதே நிறைவு பெற்றது.

## திருக்குறள் சிந்தனை

டாக்டர் சுப. அண்ணாமலை



## 14. ஆயிரமாக விளையுமா?

முயற்சிக்குத் தக்க பயன் உண்டு. இது பொது விதி. ஆனால் உணவுக்குப் பயிர் விளைச்சல் இதற்கு விலக்கு. மலைச்சாரலில் உணவுப்பயிர் விளைத்தல் கடினம். அங்கு மண்ணின் வளத்தால் காடுகள் அடர்ந்து வளர்கின்றன.

சமவெளியின் நிலை வேறு. அங்கு மண்ணின் வளம் குறைவு. உணவுப்பயிரை விளைவிக்க, நிலத்தின் மேல் மட்டத்திற்குச் சற்றுக் கீழே படிந்துள்ள வளத்தை மேலே கொண்டு

வர வேண்டும். அதற்கு ஏர் பிடித்து உழ வேண்டும். மண் நெகிழ வேண்டும். மண்வளம் கரைந்து எளிதாக வேரால் உறிஞ்சப்பட வேண்டும். நீர் வளமும் வேண்டும். இவற்றிற்றகாக நீர் பாய்ச்ச வேண்டும்.

இவ்வளவும் செய்தாலும், மழை பெய்யவில்லையேல், விளைச்சல் காணாது. எனவே மேகம் பொழியும் மழைதான் உழவனின் வருவாய். இயற்கை தரும் சலுகை.

பருவ மழை தவிறிவிட்டால், உழவர்கள் கலப்பையைப் பிடித்து உழவே மாட்டார்கள். மேலே சொன்ன காரணங்களால் விளைச்சல் காணாது. உழவு நடக்கவில்லை என்றால், ஒன்றன் பின் ஒன்றாக பல தொழில்கள் உழைப்பவர்க்கு உணவு இல்லாமையால், முடங்கிப் போகும். ஏர் நடக்காத நாடு, வாழ்க்கை நடக்காத நாடு.

ஏரின் உழாஅர் உழவர் புயலென்னும்
வாரி வளம்குன்றிக் கால். குறள் 14

**கருத்துரை:** மழை பெய்கின்ற வருவாய் தன்னுடைய பயனைத் தராவிட்டால் உழவர்கள் ஏரினால் உழமாட்டார்கள்.

பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்
நன்மை கடலின் பெரிது.
குறள் *103*




டன்டாஸ் பல் மருத்துவமனை
போவியாட் பல் மருத்துவமனை
குடும்ப பல் மருத்துவர்
**Dr. Vanathy Jeevakumar**
**டாக்டர் திருமதி வானதி ஜீவகுமார்**

*Family and General Dentistry*

**சகல பல் மருத்துவ சேவைகள்**
(Including Braces Implants)
வாரத்தில் ஏழு நாட்கள்

* Veneers * Crowns and Bridges * Braces
* Root Canal Therapy * Dental Implants
* Fillings * Extractions * Dental Cleanings
* Zoom Whitening * Mouth-guards
* Dentures * Bad Breath Prevention
* Oral Home Care Instruction

Dundas Dental Centre
29C Dundas Street E. Mississauga,
Ont., L5A 1V9 (Hurontario/Dundas)
Phone **905- 281-0273**
Fax: (905) 281-8792

Bovaird Dental Centre
10025 Hurontario St. Unit 12
Brampton, Ont.,
(Hurontario/Bovaird Dr.)
Phone **905 -846-9929**









திருவருட்செல்வர்விழா 2016 படங்கள் சில



செல்வி சாவித்திரி வைத்தீசுவரக்குருக்கள் அவர்கள் ஜனாதிபதியிடமிருந்து விருது பெறல்